அனுப்புநர்                                        பெறுநர்

திருமதி. சு. நாகரத்தினம்,

மாண்புமிகு மேயர்,

ஈரோடு மாநகராட்சி,

ஈரோடு – 638 001

<u>ந.க.எண். சி3/2023                    நாள் 31.07.2023</u>

அய்யா/அம்மையீர்

பொருள்- ஈரோடு மாமன்றம் – 31.07.2023-ஆம் தேதி மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் – மாமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை- 31.07.2023-ஆம் தேதிய சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

////

ஈரோடு மாமன்றத்தின் 2023-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31.07.2023-ஆம் தேதி திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மாமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள் இத்துடன் தங்களுக்கு இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேயர்,
ஈரோடு மாமன்றம்,
ஈரோடு

இணைப்பு- கூட்ட நடவடிக்கைகள்

# <u>கூட்டப்பொருள்கள்</u>

**1.)** ஈரோடு மாநகராட்சியில் தலைமை நீரேற்று நிலையம் தொட்டிகள், அலுவலக கட்டிட இரவு காவலர் பணி, வ.உ.சி பூங்கா, வெண்டிபாளையம் உரங்கிடங்கு .பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் லிமிடெட் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்துவரும் 25 டெக்ஸ்கோ பணியாளர்களின் ஒப்பந்தகாலம் 31..07.2023 ல் முடிவடைவதால் 01..08..2023 முதல் ஒப்பந்த காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீட்டித்து வழங்கவும் , அதற்கான உத்தேச செலவினம் பிரதிமாதம் ரூ.12,00,000/—ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும். மேலும் அரசால் அவ்வப்போது உயர்வு செய்யப்படும் ஊதியம் மற்றும் அகவிலைப்படியை வழங்கும்போது ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.சி2/2456/2020**

**482. அனுமதி வழங்கப்பட்டது.**

**2.)** ஈரோடு மாநகராட்சிக்கு உட்டப்பட்ட பகுதியில் எரிவாயு தகனமேடை வளாகத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட கூடுதல் மேடை-2 இல் எரிவாயு மூலம் தகனம் செய்யும் வகையில் இயந்திர அமைப்பு அமைக்கும் பணியை (2009–10) – இல் பணி மேற்கொண்ட M/s. General Enviro Tech நிறுவனம் மேற்படி பணிக்காக செலுத்திய வைப்பு தொகையை ரூ.17,067/– வை வழங்குமாறு கோரியுள்ளார். குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான மண்டல கூட்டமைப்பு மன்ற வழக்கு எண். OPMSEPC CBER 193/2022 திருவாளர். M/s. General Enviro Tech CBER 143/2022

| வ. எண். | காலங்கடந்த வைப்புத் தொகைப் பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண். வரிசை எண். | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி | | | | |
| 1. | RF - Vol.4 | 2010-2011 | 04/4232 | 17067.00 |
| | | | **Total** | **17,067.00** |

மேற்கண்ட வைப்புத் தொகை வருவாய்நிதி காலங்கடந்த வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், மேற்படி தொகை ரூ.17,067/–ஐ திருவாளர். M/s. General Enviro Tech அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு -</u>**

அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று காலங் கடந்த வைப்புத் தொகை ரூ.17,067/–ஐ வழங்கியமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.பி3/3421/2017**

**483. அனுமதி வழங்கப்பட்டது.**

**3.)** ஈரோடு மாநகராட்சியில் ஆயுட்காலம் முடிந்து பழுது ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் இருந்த கீழ்கண்ட வாகனங்களை அரசு அனுமதி பெற்று கழிவு செய்ய 30.09.2020–ம் தேதிய 209–ம் எண் மற்றும் 26.02.2021–ம் தேதிய 400–ம் எண் தீர்மானங்களில் மன்ற அனுமதி பெறப்பட்டன. மேலும் அதனை தொடர்ந்து அவைகளை கழிவு செய்ய மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் அனுமதி பெறப்பட்டது.

| வ. எண். | வாகன எண். | வாகனத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | TN 33 AJ 3350 | Mahendra Bolero |
| 2. | TN 33 F 0187 | Swaraj Mazda – Open Body |
| 3. | TN 33 B 9289 | Ambassador |
| 4. | TN 01 G 0695 | Matador Van |

| | | |
|---|---|---|
| 5. | TN 33 AF 4354 | Ashok Leyland – Dumper Placer |
| 6. | TN 33 F 2938 | Swaraj Mazda – Open Body Tipper |
| 7. | TN 33 AH 2648 | Ashok Leyland – Dumper Placer |
| 8. | TN 33 AF 4032 | Ashok Leyland – Dumper Placer |
| 9. | TN 33 AH 4322 | Ashok Leyland – Dumper Placer |
| 10. | TN 33 AH 2705 | Ashok Leyland – Dumper Placer |
| 11. | TN 33 AH 1207 | TATA Motors – Dumper Placer |
| 12. | TN 33 M 5018 | Ashok Leyland – Tipper Lorry |

மேற்கண்ட வாகனங்களை கழிவு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு இந்திய அரசு நிறுவனமான Metal Scrap Trading Corporation Ltd (MSTC)-ன் மூலம் 20.01.2023-ம் தேதி அன்று இணையதளம் வாயிலாக பொது ஏலம் விடப்பட்டதில் M/s V.P.M Traders, Erode நிறுவனத்தினரால் அதிகபட்ச ஏலத் தொகையாக ரூ.14,23,500/– கேட்கப்பட்டது. மேலும் மேற்கண்ட ஏலத்தொகைக்கு 30.05.2023–ம் தேதிய 442–ம் எண் தீர்மானத்தில் மாமன்ற அனுமதி பெறப்பட்டது.

மேலும் மேற்கண்ட பொது ஏலம் 20.01.2023–ம் தேதியன்று விடப்பட்டபோது ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்

நன்னடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததாலும், வாகனங்களின் Registration Certificate–களை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஒப்படைத்ததற்கான உத்திரவுகள் வட்டார போக்குவரத்து அலுவலகக் கடிதங்கள் R.No. 130/A3/2023 தேதி 09.06.2023 அன்று கிடைக்கபெற்றதாலும் எலத்தின் Validity Perlod–க்குள் வாகனங்களை விற்க உத்திரவு வழங்க இயலவில்லை. இந்நிலையில் மேற்கண்ட பொது ஏலத்தின் Validity Period 60 நாட்கள் என்பதால் மறு ஏலம் மூலம் விற்குமாறு MSTC நிறுவனத்தின் கடித எண். நாள் lot ea 34385 நாள் 01.06.2023-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனங்களை மத்திய அரசு நிறுவனமான MSTC (Metal Scrap Trading Corporation Ltd) மூலம் மறுஏலம் விட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1 அனுமதி வழங்கலாம்.

2.பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ2/2806/2018**

**484. அனுமதி வழங்கப்பட்டது.**

**4.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -3க்குட்பட்ட வார்டு எண். 50 நல்லியம்பாளையம் ஆரம்பப்பள்ளி முதல் ஓடைமேடு பாலம் வரை (Near UGSS pumping station) அருகில் புதிதாக தார் சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆய்வின் போது நல்லியம்பாளையம் பிரதான சாலை குறுகிய சாலையாக உள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. மேலும் ஆய்வின் போது முத்தம்பாளையம் பகுதி-1, ரங்கம்பாளையம், ஓடைமேடு, அண்ணாநகர், வெற்றி நகர், சங்கன்குறை மற்றும் முத்தம்பாளையம் பகுதி-4 ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் செல்வதற்கு ஏதுவாகவும் இணைப்பு சாலையாக உள்ளதாலும், போக்குவரத்திற்கு மிகவும் பயன் உள்ளதாக அமைவதாலும், பொது மக்களின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளின் அறிவுரையின்படியும் அப்பகுதி பிரதான சாலையை இணைக்கும் இணைப்பு சாலையினை ஏற்கனவே உள்ள சாலை மற்றும் 40 அடி சாலைக்குத் தேவைப்படும் பட்டா இடம் ஆகியவை பெற்று பொதுமக்கள் பங்களிப்புடன் நமக்குநாமே திட்டத்தின் கீழ் நல்லியம்பாளையம் ஆரம்பப்பள்ளி முதல் ஓடைமேடு பாலம் வரை ( Near UGSS pumping station) அருகில் புதிதாக தார் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 120.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பொது மக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதியும், நமக்குநாமே திட்டத்தின் கீழ் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.இ1/1191/2023**

**485. அனுமதி வழங்கப்பட்டது.**

**5.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 4 க்குட்பட்ட வார்டு எண் 38 முதல் 43 வரை மற்றும் 52 முதல் 60 வரை உள்ள பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் திறப்பாளர், மேல்நிலைத்தொட்டி இரவு காவலர் மற்றும் மேல்நிலை தொட்டிகளை சுத்தம் செய்யும் பணிகளை செய்ய பணியாளர்கள் ஒதுக்கீடு ஏதும் இல்லாத காரணத்தினால் மண்டலம் - 4 க்குட்பட்ட 15 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்ய ஆடவர் சுய உதவிக்குழு மூலம் 18 பணியாளர்களை தற்காலிகமாக பயன்படுத்தி பணிகளை செய்ய துளசி சுயஉதவிக்குழு மூலம் 18 பணியாளர்களை முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பெற்று பணிகளை

செய்யவும்மேற்படி 18 பணியாளர்களுக்கு ஏப்ரல் 2023 முதல் ஜூன் 2023 வரை மூன்று மாத காலத்திற்கு ஊதியம் மற்றும் E.P.F நிர்வாக பங்குத்தொகை 13% ம் சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ.14.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்த்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**ந.க.எண்.இ2/0096/2023**

**486. அனுமதி வழங்கப்பட்டது.**

**6.)** தூய்மை இந்தியா திட்டம் (2.0) 2021–22–ன் கீழ் ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண்..53க்குட்பட்ட முனிசிபல் சத்திரம் பகுதியல் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணியினை ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.18856/2022/தூஇதி2, நாள்.13.07.2022–ன் வாயிலாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு மூடி முத்திரையிட்ட உறை முறையில் 04.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற

ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. திரு. V. DHAMODHARAN | (-) 0.35%சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. திரு. G. ANANDHAN | (+) 1.36% சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)0.35 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.V.DHAMODHARAN அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-) 0.35 சதவீதத்தில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.V.DHAMODHARAN அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்கலாம்.

2. மேலும் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி திரு.V.DHAMODHARAN அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்

**ந.க.எண்.இ1/3765/2022-01**

**487 அனுமதி வழங்கப்பட்டது.**

**7.)** இம்மாநகராட்சிக்குட்பட்ட வணிக வளாக குத்தகையினங்களுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க 06.07.2023–ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக்கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

| வ. எண். | குத்தகையினம் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | பெயர் திரு./திருமதி. | ஏலக் கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ. |
| 1. | பேருந்து நிலைய புதிய வணிக வளாக தரைத் தளக் கடை எண்.20 (இரண்டாவது முறை நடைபெற்ற ஏலம்) | ஏ. செல்வராஜ் | 33,000– | |
| | | சி. ஜோதீஸ்வரன் | 39,000– | |
| | | ஆர். ராஜகுமார் | 12,500– | |
| | | மௌலிகாந்த் | 26,000– | |
| | | வி. விஜயகுமார் | 30,000– | |
| | | **பி. மகேஸ்வரி** | **39,500–** | |
| | | எஸ். அப்துல் ரஹ்மான் | 27,500– | |
| | | முகம்மது முஸ்தபா | 15,000– | |
| | | யா. நௌபல் ரஹ்மான் | 20,500– | |
| | | கே. மாதேஸ்வரன் | – | 26,128– |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | ஹெம்மிங் வே வணிக வளாக கடை எண். 1 (ஆறாவது முறையாக நடைபெற்ற ஏலம்) | **டி. உமா** | **2,800–** | |
| 3. | நேதாஜி வணிக வளாக கடை எண். 33 (எட்டாவது முறையாக நடைபெற்ற ஏலம்) | **ஆர். தர்மராஜ்** | **5,100–** | |
| 4. | நேதாஜி வணிக வளாக கடை எண். 35 (எட்டாவது முறையாக நடைபெற்ற ஏலம்) | ஆர். ராஜேந்திரன் | 5,700– | |
| | | **சாந்தினி சண்முகம்** | **5,800–** | |

மேற்காணும் வ.எண்1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு உச்ச ஏலக் கேள்வித் தொகை வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஏலதாரர் பெயர் | உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ. | அரசாங்க மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| 1. | திருமதி. பி. மகேஸ்வரி | 39,500- | 11,500- |
| 2. | திருமதி. டி. உமா | 2,800- | 2,700- |
| 3. | திரு. ஆர். தர்மராஜ் | 5,100- | 5,000- |
| 4. | திருமதி. சாந்தினி சண்முகம் | 5,800- | 5,600- |

மேற்படி வ.எண். 1 முதல் 4 வரையிலான ஏலதாரர்கள் அரசாங்க மதிப்பை விட அதிகமாக ஏலக் கேள்வி கோரியுள்ளதால், மேற்படியார்களின் உச்ச ஏலக் கேள்வித் தொகைகளை ஏற்பதற்கும், உரிமம் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு -</u>**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.அ1/3640/2020**

**488. அனுமதி வழங்கப்பட்டது.**

**8.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. சாலை வணிக வளாக கடை எண். 40 (தற்போது வஉசி. பூங்காவில் அமைந்துள்ள கடை எண்.1) குத்தகையினத்தின் குத்தகைதாரர் திரு. நாகராஜன் என்பவர் காலமாகி விட்டதால் அன்னாரின் மனைவி திருமதி. நா. பத்மாவதி என்பவர் கடையினை தொடர்ந்து நடத்த இயலவில்லை எனவும், குத்தகை உரிமத்தை ரத்து செய்து தருமாறும் 27.06.2023–ந் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மேற்படியாரின் விண்ணப்பத்தின் மீது விசாரணை செய்யப்பட்டதில், குத்தகைதாரர் திரு. நாகராஜன் என்பவர் உடல் நலக் குறைவால் காலமாகி விட்டதாக தெரியவருகிறது. மேலும் கடையின் உரிமக் காலம் 31.07.2023 உடன் முடிவடைவதால் திரு. நாகராஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை 31.07.2023 உடன் ரத்து செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி குத்தகை இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும்,

அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு -**</u>

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.அ1/3640/2020**

**489. அனுமதி வழங்கப்பட்டது.**

**9.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 வார்டு எண்.02 மாயபுரம் மேல்நிலைத்தொட்டி மற்றும் வார்டு எண்.07 அஜந்தா நகர் மேல்நிலைத்தொட்டிக்கு சுற்றுசுவர் மற்றும் பாதுகாவலர் அறை கட்டுதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.33.00 இலட்சத்திற்கு 15வது மத்திய நிதிக்குழு மானியம் (Tied Grant) 2021–22–ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் ந.க.எண்.21191/2021/அம்ரூத்-2, நாள்.29.03.2022 கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு 25.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியிருந்த M/s. Vetri Construction நிறுவனத்திற்கு 16.09.2022–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணியில் மாயபுரம் மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு சுற்றுசுவர் அமைக்க வேலைகள் துவங்கும் பொழுது நெடுஞ்சாலைத்துறை மூலம் பவானி பிரதான சாலையை அகலப்படுத்தும் பணிக்கு சர்வே செய்யும் போது மேல்நிலை தொட்டியை சார்ந்து சாலையின் எல்லை வருவதால் முன்புற பகுதியில் சுற்று சுவர் அமைக்க இயலாத நிலை ஏற்பட்டது. இதனால் அவ்விடத்தில் சுற்றுசுவர் மற்றும் பாதுகாவலர் அறை கட்டுவதற்கு உகந்ததாக இல்லாத காரணத்தால் மாயபுரம் மேல்நிலை தொட்டிக்கு சுற்று சுவர் கட்டும் பணியிடத்திற்கு பதிலாக கே.கே.புதூர் 5.00 இலட்சம் லிட்டர் (பாலகாட்டூர்) மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்திற்கு சுற்றுசுவர் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. எனவே மேற்படி பணிக்கான இடம் மாற்றம் செய்து (Change of site) பணியை மேற்கொள்ளவும், இப்பணியை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் M/s Vetri Construction மூலம் வழங்கப்பட்டுள்ள விலை விகிதத்தின் அடிப்படையில் பணியை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

அ) அனுமதி வழங்கலாம்

ஆ) திட்டம் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று

பாலக்காட்டூர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி வாளகத்தில் சுற்றுசுவர் அமைத்தல் பணி மேற்கொள்ள உள்ளமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1/1565/2023-9**

**490. அனுமதி வழங்கப்பட்டது.**

**10.)** ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.1,2:3,4, 6,7,13,14,15,16,17,23,24,25, மற்றும் 26 ஆகிய 15 வார்டுகளிலும் 2019–2020ம் ஆண்டு தொழில் உரிமம் பெறாமல் தொழில் புரிந்து வந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள் மீது இம்மாநகராட்சி சார்பாக வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கிற்கு மாநகராட்சி சார்பாக மாநகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.எம்.சுரேஷ்குமார் அவர்கள் ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.J.M1.STC NO.2163/2019 முதல் J.M1.STC NO.2175/2019 மற்றும் J.M1.STC NO.2177/2019, J.M1.STC NO.2179/2019, 2180/2019, 2181/2019 வரை 17 வழக்குகள் மாநகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு மேற்படி அனைத்து நிறுவன உரிமையாளர்களும் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில் உரிமத் தொகையை செலுத்தி உள்ளனர். மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வாதாடிய மாநகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.எம்.சுரேஷ்குமார் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.85,000/– வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி வழக்கின் அவசர அவசியத்தை முன்னிட்டு வழக்கை ஏற்று நடத்திய மாநகராட்சி நிலை வழக்கறிஞர் திரு. சுரேஷ்குமார் அவர்களிடம் ஒப்படைத்தமைக்கும், மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. அனுமதி வழங்கலாம்

2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அறுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/2109/2022**

**491. அனுமதி வழங்கப்பட்டது.**

**11.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-IVல் உள்ள 15–வார்டுகளிலும் சுமார் 40473 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 40 மெ.டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு, பொதுசுகாதார சீர்கேடு ஏற்படாமல் மேலும் நோய்த் தொற்று ஏற்படும் அவசியத்தை கருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்வதற்கு 6 (HCV) கனரக வாகனங்களும், 34 இலகு வகை (LCV) வாகனங்களும் உள்ளது. நிரந்தர ஓட்டுநர்கள் மொத்தம் 5 பேர் மட்டும் உள்ளனர். ஆகவே, பற்றாக்குறையாக உள்ள ஓட்டுநர் பணிக்கு தற்போது செயல்பாட்டில்

உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இவர்களுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2 நாள்.30.06.2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள படி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு (Driver) ஓட்டுநர் (Semi-Skilled Labourers-Driver) நாள் ஒன்றுக்கு ரூ.745/– (தினக்கூலி அடிப்படையில்) ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாத காலத்திற்கு 31 நாட்களுக்கு ஓட்டுநர் பணி (Drivers) மேற்கொள்ளும் சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலிக்கான செலவினம் கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.. | ஓட்டுநர்கள் (Drivers) | 45 |

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1.. | ஓட்டுநர்கள் (Drivers) | 45 | Drivers<br>45x31x745=10,39,275/-<br>(12%+1%)<br>13%=1,35,106/- | 11,74,381/- |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1அனுமதி வழங்கலாம்.

2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

3. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30.06.2022–ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி ஓட்டுநர் பணி (Drivers) மேற்கொள்ளும் தினக்கூலி பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலியினை நிர்ணயம் செய்து 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாத காலத்திற்கு 31 நாட்களுக்கு வழங்குவதற்கும் அதனால் ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதியை எதிர் நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/1894/2020(ம.4)**

**492. அனுமதி வழங்கப்பட்டது.**

**12.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-IVல் உள்ள 15–வார்டுகளில் சுமார் 40473 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நான் ஒன்றுக்கு சுமார் 40 மெ.டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு பொதுசுகாதார சீர்கேடு ஏற்படாமல், மேலும் நோய் தொற்று ஏற்படும் அவசியத்தை கருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டியுள்ளது. ஆனால் இப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/ள2, நாள்.30.06.2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948–ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள படி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு (SWM) தற்போது நாள் ஒன்றுக்கு ரூ.707/- (தினக்கூலி அடிப்படையில்) ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 199 நபர்களுக்கு 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாத காலத்திற்கு 31 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பணி (SWM) மேற்கொள்ளும் சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள

தினக்கூலிக்கான செலவினம் கீழ்கண்டவாறு மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.. | தூய்மைப்பணியாளர்கள் (SWM) | 214 |

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1.. | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 214 | SWM<br>214x31x707=46,90,238/-<br>(12%+1%)<br>13%=6,09,731/- | 52,99,969/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1அனுமதி வழங்கலாம்.

2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

3. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30.06.2022–ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி திடக்கழிவு மேலாண்மை பணி (SWM) மேற்கொள்ளும் தினக்கூலி பணியாளர்களுக்கு நிர்ணயம்

செய்யப்பட்டுள்ள தினக்கூலியினை நிர்ணயம் செய்து 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாத காலத்திற்கு 31 நாட்களுக்கு வழங்குவதற்கும் அதனால் ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/1894/2020(ம.4)**

**493. அனுமதி வழங்கப்பட்டது.**

**13.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-IIIல் உள்ள 15–வார்டுகளிலும் சுமார் 48134 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 40 மெ.டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு, பொதுசுகாதார சீர்கேடு ஏற்படாமல், மேலும் நோய்த் தொற்று ஏற்படும் அவசியத்தை கருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும் இவ்வாறு உருவாகும் 40 மெ.டன் திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு மொத்தம் 49 வாகனங்கள் உள்ளது. ஆனால் நிரந்தர ஓட்டுநர்கள் நான்கு பேர் மட்டுமே உள்ளனர். ஆகவே இப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான ஓட்டுனர்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள்

மூலம் பணிகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30.06.2022–ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948–ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள படி சுய உதவிக்குழு (Driver) ஓட்டுநர் (Semi-Skilled Labourers-Driver) நாள் ஒன்றுக்கு ரூ.745/– (தினக்கூலி அடிப்படையில்) ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 44 நபர்களுக்கு 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாத காலத்திற்கு 31 நாட்களுக்கு ஓட்டுநர் பணி (Driver) மேற்கொள்ளும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நிர்ணயக்கப்பட்டுள்ள தினக்கூலிக்கான செலவீனம் கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.. | ஓட்டுநர்கள் (Drivers) | 44 |

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1.. | ஓட்டுநர்கள் (Drivers) | 44 | Drivers<br>44x31x745=10,16,180/-<br>(12%+1%)<br>13%=1,32,103/- | 11,48,283/- |

அலுவலகக் குறிப்பு

1 அனுமதி வழங்கலாம்.

2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கப்படும் நாள்வரை இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.எச்1/2200/2020(ம.3)**

**494. அனுமதி வழங்கப்பட்டது.**

**14.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-IIIல் உள்ள 15–வார்டுகளிலும் சுமார் 48134 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 40 மெ.டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு, பொதுசுகாதார சீர்கேடு ஏற்படாமல், மேலும் நோய்த் தொற்று ஏற்படும் அவசியத்தை கருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30.06.2022–ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள படி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு (SWM) தற்போது நாள் ஒன்றுக்கு ரூ.707/– (தினக்கூலி அடிப்படையில்) ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 281 நபர்களுக்கு 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாத

காலத்திற்கு 31 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பணி (SWM) மேற்கொள்ளும் சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு நிர்ணயக்கப்பட்டுள்ள தினக்கூலிக்கான செலவீனத்தை கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.. | தூய்மைப்பணியாளர்கள் (SWM) | 281 |

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1.. | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 281 | SWM<br>281x31x707=61,58,677/-<br>(12%+1%)<br>13%=8,00,628/- | 69,59,305/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1அனுமதி வழங்கலாம்.

2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கப்படும் நாள்வரை இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்

**ந.க.எண்.எச்1/2200/2020(ம.3)**

**495. அனுமதி வழங்கப்பட்டது.**

**15.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -2ல் வார்டு எண். 5,8,9,11,12,18,20, 21,22,27,28,29,35,36,37 ஆகிய 15 வார்டுகளில் சுமார் 58177 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன. மேலும் பேருந்து நிலையம், தினசரி காய்கறி சந்தை, வ.உ.சி.பூங்கா வழிபாட்டு தலங்கள் மற்றும் முக்கிய வணிகப்பகுதிகள் என பொதுமக்கள் அதிக அளவில் கூடும் பகுதிகள் இம்மண்டலத்தில் அமைந்துள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 70 மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகளை சேகரிக்கவும், தேக்கமடையாமலும் பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமலும், நோய்த் தொற்று ஏற்படாமலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்வதற்கு 18 கனரக வாகனங்கள், 31 இலகுரக வாகனங்கள், அலுவலக வாகனங்கள் 7 என மொத்தம் 56 எண்ணிக்கையிலான வாகனங்கள் உள்ளன. மேலும் வணிகப் பகுதிகளில் மாலை மற்றும் இரவு நேரங்களில் திடக்கழிவுகளை சேகரிப்பதற்கு பயன்பாட்டில் உள்ள வாகனங்களில் 12 வாகனங்கள் கூடுதலாக இயக்கப்பட்டு கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது. மேற்கண்ட அனைத்து வாகனங்களை இயக்குவதற்கு 3 எண்ணிக்கையிலான நிரந்தர ஓட்டுநர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். ஆகவே பற்றாக்குறையாக உள்ள ஓட்டுனர்

பணியிடங்களுக்கு தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இவர்களுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2 நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின்படி சுய உதவிக்குழு உறுப்பினர் (Semi-Skilled Labourers) ஓட்டுநர் (Driver) பணிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.745/– என்ற தினக்கூலி அடிப்படையில் 01.04.2023 முதல் 31006.2023 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 01.07.2023 முதல் 31.07.2023 முடிய 1 மாத காலத்திற்கு 30 நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு ஓட்டுநர் பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.. | ஓட்டுநர்கள் (Drivers) | 62 |

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1.. | ஓட்டுநர்கள் (Drivers) | 62 | Drivers<br>62x30x745=13,85,700/-<br>(12%+1%)<br>13%=1,80,141/- | 15,65,841/- |

<u>அலுவகக்குறிப்பு</u>:

1. அனுமதி வழங்கலாம்.

2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கப்படும் நாள் இவற்றில் எது முன்னரோ அது வரை அனுமதிக்கலாம்.

3. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2 நாள்.30/06/2022–ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948–ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து தூய்மைப் பணியாளர்களுக்கு ஜூலை-2023 ஆகிய ஒரு மாதத்திற்கு வ.எண்.2-ன்படி ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/1014/2022(ம.2)**

**496. அனுமதி வழங்கப்பட்டது.**

**16.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -2ல் வார்டு எண். 5,8,9,11,12,18,20, 21,22,27,28,29,35,36,37 ஆகிய 15 வார்டுகளில் சுமார் 58177 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன. மேலும் பேருந்து நிலையம் தினசரி காய்கறி சந்தை வ.உ.சி பூங்கா வழிபாட்டு தலங்கள் மற்றும் முக்கிய வணிகப்பகுதிகள் என பொதுமக்கள் அதிக அளவில் கூடும் பகுதிகள் இம்மண்டலத்தில் அமைந்துள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 70 மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறும் உருவாகும் திடக்கழிவுகள் தேக்கமடையாமலும், பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமலும், நோய்த் தொற்று ஏற்படாமலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். ஆனால் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசியத்தை கருதி செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2 நாள்.30/06/2022–ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948–ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின்படி தூய்மைப் (Other Unskilled

Menial) பணிக்கு (SWM) நாள் ஒன்றுக்கு ரூ707/– என்ற தினக்கூலி அடிப்படையில் 01.04.2023 முதல் 30.06.2023 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 01.07.2023 முதல் 31.07.2023 முடிய 1 மாத காலத்திற்கு 30 நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.. | தூய்மைப்பணியாளர்கள் (SWM) | 310 |

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1.. | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 310 | SWM<br>310x30x707=65,75,100/-<br>(12%+1%)<br>13%=8,54,763/- | 74,29,863/- |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. அனுமதி வழங்கலாம்.

2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கப்படும் நாள் இவற்றில் எது முன்னரோ அது வரை அனுமதிக்கலாம்.

3. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து தூய்மைப் பணியாளர்களுக்கு ஜூலை-2023 ஒரு மாதத்திற்கு வ.எண்.2ன்படி ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/1014/2022(ம.2)**

**497. அனுமதி வழங்கப்பட்டது.**

**17.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1-ல் வார்டு எண், 1,2,3,4,6,7,13,14,15 ,16,17,23,24,25,26ஆகிய 15 வார்டுகளில் சுமார் 46122 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 35 மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகளை சேகரிக்கவும், தேக்கமடையாமலும், பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமலும், நோய்த் தொற்று ஏற்படாமலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்வதற்கு 13 கனரக வாகனங்கள் மற்றும் 32 இலகுரக வாகனங்கள்

என மொத்தம் 45 எண்ணிக்கையிலான வாகனங்கள் உள்ளன இவ்வாகனங்களை இயக்குவதற்கு 2 எண்ணிக்கையிலான நிரந்தர ஓட்டுநர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். ஆகவே பற்றாக்குறையாக உள்ள ஓட்டுனர் பணியிடங்களுக்கு தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இவர்களுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948–ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின்படி சுய உதவிக்குழு உறுப்பினர் (Semi-Skilled Labourers) ஓட்டுநர் (Driver) பணிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.745/– என்ற தினக்கூலி அடிப்படையில் 01.04.2023 முதல் 30.06.2023 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாத காலத்திற்கு 31 நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு ஓட்டுநர் பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு.

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.. | ஓட்டுநர்கள் (Drivers) | 45 |

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1.. | ஓட்டுநர்கள் (Drivers) | 45 | Drivers<br>45x31x745=10,39,275/-<br>(12%+1%)<br>13%=1,35,106/- | 11,74,381/- |

அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவகக்குறிப்பு:</u>

1. அனுமதி வழங்கலாம்.

2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் செய்யப்படும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

3. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, * நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து ஓட்டுநர் பணியாளர்களுக்கு தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாதத்திற்கோ அல்லது அவர்கள் பணியாற்றும் வரையோ இதில் எது

முன்னரோ அதற்கு ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்.எச்1/421/2023**

**498. அனுமதி வழங்கப்பட்டது.**

**18.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1ல் வார்டு எண் 1,2:3,4,6,7,13,14,15, 16,17,23,24,25,26 ஆகிய 15 வார்டுகளில் சுமார் 46122 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 35 மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கமடையாமலும், பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமலும், நோய்த் தொற்று ஏற்படாமலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். ஆனால் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசியத்தை கருதி செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022–ன்படி நிர்ணயம்

செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948–ன்டி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின்படி தூய்மைப் (Other Unskiled Merial) பணிக்கு (SWM) நாள் ஒன்றுக்கு ரூ.707/– என்ற தினக்கூலி அடிப்படையில் 01.04.2023 முதல் 30.06.2023 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாத காலத்திற்கு 31 நாட்களுக்கு தற்காலிகமாக சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.. | தூய்மைப்பணியாளர்கள் (SWM) | 205 |

| வ. எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1.. | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 205 | SWM<br>205x31x707=44,92,985/-<br>(12%+1%)<br>13%=5,84,088/- | 50,77,073/- |

அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவகக்குறிப்பு:</u>

1. அனுமதி வழங்கலாம்.

2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் செய்யப்படும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

3. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6492/2022/எ2, நாள்.30/06/2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து தூய்மைப் பணியாளர்களுக்கு 01.07.2023 முதல் 31.07.2023 முடிய ஒரு மாதத்திற்கோ அல்லது அவர்கள் பணியாற்றும் காலம் வரையிலோ இதில் எது முன்னரோ அதற்கு ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்.எச்1/421/2023**

**499. அனுமதி வழங்கப்பட்டது.**

**19.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகள் மற்றும் பிற காரணங்களால் சேதமடைந்த சாலைகளில் முன்னுரிமை அடிப்படையில் 11.90கி.மீ நீளத்திற்கு ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சேதமடைந்த மேற்படி 11.90கி.மீ நீளசாலைகளை இம்மமாநகராட்சி பொது நிதியில் இருந்து ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் 30 பணிகளாக மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: 6840/2023/MCA-2-2, நாள்:23.06.2023-ன் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு.

| Sl.No | Name of Road | Length in Mtrs | Estimate Amount (Rs. In Lakhs) |
|---|---|---|---|
| 1 | Sripuram Cross street-1 | 225.00 | 8.00 |
| 2 | Sripuram Cross street-2 | 330.00 | 11.50 |
| 3 | Sripuram Cross street-3 | 300.00 | 11.00 |
| 4 | Sripuram Cross street-4 | 284.00 | 11.00 |
| 5 | Sripuram Last Cross street S to N, Sripuram Cross Link Road N To S | 275.00 | 10.55 |
| 6 | Lakshmipuram (old Bank of Baroda back side), | 120.00 | 5.10 |
| 7 | LakshmipuramIyyappanpataraisandhu | 125.00 | 5.30 |
| 8 | Thattankuttai tank road N To S, Thattankuttai cross street-3, Thattankuttai cross street-4, Thattankuttai cross street-5 | 562.00 | 22.00 |
| 9 | Muthampalayam Phase -I Mathavi street, KK.Nagar, | 1650.00 | 65.00 |

| | | | |
|---|---|---|---|
| 10 | Pavadi Street | 261.00 | 32.00 |
| 11 | Vinayaga Garden-1, Vinayaga Garden-2 | 650.00 | 23.00 |
| 12 | D.R Avenue -2 | 320.00 | 13.60 |
| 13 | Bharathi Nagar Cross Road 2 | 247.00 | 11.00 |
| 14 | Thanigai nagar-1, Thanigai nagar-2, Thanigai nagar-3 | 220.00 | 11.50 |
| 15 | Rajivgandhi Street | 145.00 | 5.50 |
| 16 | Sasthri Nagar, Sasthri Nagar Karupparayan Kovil Street, Sasthri Nagar Kalyanasundram Main Road | 1350.00 | 57.00 |
| 17 | Sasthri Nagar Vaikkal Road to Sasthri Nagar Junction Cross Road | 415.00 | 15.50 |
| 18 | Muthunagar Extension, Muthunagar Extension Cross Road | 232.00 | 9.50 |
| 19 | Thiruvalluvarnagar | 140.00 | 5.50 |
| 20 | Vinayakar Kovil Street-9 | 165.00 | 7.00 |
| 21 | Nehruji Street Cross Road 2 | 50.00 | 2.25 |
| 22 | VGB Garden | 720.00 | 27.00 |
| 23 | Ketti Nagar Park Cross Road, Ketti Nagar Park Road | 220.00 | 10.00 |
| 24 | Vinayakar Kovil Street-10 | 460.00 | 25.75 |
| 25 | Kongu Street Muthusamy Colony | 615.00 | 23.15 |
| 26 | DR Avenue | 260.00 | 8.75 |
| 27 | Appachi Nagar | 230.00 | 7.85 |
| 28 | Iraniyan Street 1, Iraniyan Street 2, Iraniyan Street 3 | 410.00 | 13.50 |
| 29 | Molagoundanpalayam Cross Road 3, Molagoundanpalayam Cross Road 2 | 325.00 | 13.10 |

| | | | |
|---|---|---|---|
| 30 | Vinayakar Kovil street - 2 To Nehruji street Road - 2 ,<br>VinayakarK ovil street - 2 To Nehruji street Road - 1 | 594.00 | 28.10 |
| | **TOTAL** | **11900.00** | **500.00** |

எனவே மேற்கண்டவாறு வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க இம்மாநகராட்சியின் 2023-2024-ம் நிதியாண்டின் பொது நிதியில் மேற்கண்ட சாலை சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிவழங்கலாம்.
2. பணியின் அவசரஅவசியத்தைக் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகுமேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற் கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்:இ1/1501/2023**

**500. அனுமதி வழங்கப்பட்டது.**

**20.)** ஈரோடு மாநகராட்சிக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகளுக்கு மாநகராட்சி சார்பாக நீதிமன்றங்களில் ஆஜராகவும், சட்ட ஆலோசனை வழங்கவும், நான்கு மண்டலங்களுக்கும் தலா ஒரு வழக்கறிஞர் வீதம் நான்கு வழக்கறிஞர்களை நியமனம் செய்வதற்கு மாமன்றத்தின் 29.12.2022–ந் தேதிய 289–ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி பார் கவுன்சிலில் பதிவு செய்து 5 ஆண்டுகள் பணி செய்து வரும் வழக்கறிஞர்களின் பட்டியல் கோரி 09.01.2023 மற்றும் 23.02.2023 ஆகிய தேதிகளில் கடிதம் அனுப்பப்பட்டதில், கீழ்க்கண்ட விவரப்படி விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பெயர் / முகவரி | பிறந்த தேதி | கல்வி தகுதி | பார் கவுன்சில் | மொத்த பணிக்காலம் |
|---|---|---|---|---|---|
| **1.** | திரு. டி. மனோகரன்,<br>த/பெ. சி. தங்கமுத்து,<br>**42**, வண்டிக்காரன் தோட்டம்,<br>கொல்லம்பாளையம்,<br>ரயில்வே காலனி அஞ்சல்,<br>ஈரோடு–**638 002.** | **05.12.1973** | B.A.,<br>B.L., | Ms 154/2001,<br>dt: 14.02.2001 | **22**<br>வருடங்கள் |
| **2.** | திரு. எஸ். வெங்கடேசன்,<br>த/பெ. ஆர்.வி. சுப்புராமன்,<br>**11**, LVB நகர்,<br>கொங்கம்பாயைம்,<br>சித்தோடு அஞ்சல்,<br>ஈரோடு–**638 012.** | **25.05.1973** | B.B.M.,<br>M.B.E.,<br>L.L.B., | Ms<br>2496/2009,<br>dt:18.09.2009 | **5** வருடம்<br>**7** மாதங்கள் |
| **3.** | திரு. எஸ். ரமேஷ்,<br>த/பெ. ஏ.கே. செங்கோட்டையன்,<br>7A, குறுக்கு வீதி,<br>பெனாங்குகாரர் தோட்டம்,<br>பெரியசேமூர்,<br>ஈரோடு–**638 004.** | **03.06.1986** | B.C.S.,<br>B.L., | Ms<br>3066/2009,<br>dt:02.12.2009 | **13**<br>வருடங்கள் |
| **4.** | திருமதி. ஆர். கவிதா,<br>க/பெ. பி. பிரபு,<br>**251/1**, ஸ்ரீசபரி கார்டன்,<br>ஆனைக்கல்பாளையம்,<br>**6**புதூர் அஞ்சல்,<br>ஈரோடு–**638 002.** | **29.09.1980** | M.A.,<br>B.L.,<br>DLL.,<br>AL., | Ms 758/2005,<br>dt: 13.04.2005 | **18**<br>வருடங்கள் |

மேற்படியார்களை மண்டலத்திற்கு ஒருவர் வீதம் நான்கு மண்டலங்களுக்கு நிலை வழக்கறிஞர்களாக (Standing Counsel) நியமனம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு –</u>

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண். அ1/8327/2022**

**501. அனுமதி வழங்கப்பட்டது.**

**21.)** இம்மாநகராட்சிக்குட்பட்ட ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொது அறிவு மற்றும் போட்டித் தேர்வுத் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டு தினகரன் நாளிதழ் நிறுவனத்தாரின் 07.06.2023ந் தேதிய கடிதத்தில் கோரியுள்ளவாறு கீழே குறிப்பிட்டுள்ள விவரப்படி 2023 – 2024–ம் கல்வியாண்டில் 220 நாட்களுக்கு தினகரன் நாளிதழ் விநியோகம் செய்யவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பள்ளியின் பெயர் | ஒரு நாளைக்கு வழங்கப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை | பள்ளியின் விபரம் | பள்ளிக்கூட வேலை நாட்களில் மட்டும் சப்ளை செய்யப்படும் (220 நாட்கள்) | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஒரு ஆண்டு தொகை | தினகரன் பிரதியின் சலுகை விலை |
| 1 | விநாயகர் கோவில் வீதி (மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 2 | கங்காபுரம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 3 | கொளத்துபாளையம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 4 | பெரிய வலசு(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 5 | ராஜாஜிபுரம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 6 | வீரப்பன்சத்திரம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 7 | செம்மாம்பாளையம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 8 | வில்லரசம்பட்டி(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 9 | வீரப்பம்பாளையம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 10 | காரபாறை(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 11 | முத்தம்பாளையம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | இரங்கம்பாளையம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 13 | நல்லியம்பாளையம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 14 | பழையபாளையம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 15 | அணைகட்டு(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 16 | இரயில்வே காலணி(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 17 | கொல்லம்பாளையம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 18 | பாலசுப்புராயுலு வீதி(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 19 | பெரியார் வீதி(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 20 | குமிளம்பரப்பு(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 21 | சமத்துவபுரம்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 22 | பெரியமாரியம்மன் கோவில் வீதி (மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 23 | வலையகார வீதி(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 24 | கச்சேரி வீதி(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 25 | ஓடகாட்டு வலசு(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 26 | இராயபாளையம் பூதுர்(மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 27 | காவேரி கரைCPS | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 28 | சொட்டையம்பாளையம்( மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 29 | சொக்காயி தோட்டம் (மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 30 | காமராஜ் வீதி (மா.ஆ.ப) | 3 | ஆரம்ப பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 31 | செங்குந்தபுரம்(மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 32 | பெருமாள் மலை (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 33 | இந்திராபுரம் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 34 | வைராபாளையம் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 35 | அசோகபுரம் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 36 | திருநகர் காலணி (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 37 | எல்லபாளையம் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 38 | கொங்கம்பாளையம் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 39 | தண்ணீர்பந்தல் பாளையம் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 40 | EBP நகர் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 41 | SSP நகர் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 42 | மாணிக்கம்பாளையம் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 43 | காவேரி ரோடு (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 44 | டீச்சர்ஸ் காலணி (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 45 | SKC ரோடு (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 46 | மோளகவுண்டன்பாளையம் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 47 | ஜவுளி நகர் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 48 | B.Pஅக்ரஹாரம் (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 49 | சு.கா.வலசு (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 50 | இரயில்வே காலணி (மா.ந.ப) | 3 | நடுநிலை பள்ளி | 2310 | ரூ.3.50 |
| 51 | பெரியவலசு(மா.உ.ப) | 3 | உயர்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 52 | இடையன்காட்டு வலசு(மா.உ.ப) | 3 | உயர்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 53 | சின்னசேமூர் (மா.உ.ப) | 3 | உயர்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 54 | செங்கோடம்பாளையம் (மா.உ.ப) | 3 | உயர்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 55 | நஞ்சப்பன்கவுண்டன்வலசு (மா.உ.ப) | 3 | உயர்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 56 | காமராஜ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி(மா.மே.ப) | 3 | மேல்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 57 | இரயில்வே மேல்நிலைப் பள்ளி(மா.மே.ப) | 3 | மேல்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 58 | கருங்கல்பாயைம்பெண்கள் மேல்நிலைப் பள்ளி(மா.மே.ப) | 3 | மேல்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 59 | குமலன்குட்டை(மா.மே.ப) | 3 | மேல்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 60 | திண்டல் (மா.மே.ப) | 3 | மேல்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 61 | காசிபாளையம் (மா.மே.ப) | 3 | மேல்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| 62 | R.N புதுர் (மா.மே.ப) | 3 | மேல்நிலைபள்ளி | 2310 | ரூ.3.50 |
| **மொத்தம்** | | **186** | **15310** | **143220** | |

மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1.மேற்கண்டுள்ள விவரப்படி 2023–2024–ம் கல்வியாண்டில் 220 நாட்களுக்கு தினகரன் நாளிதழ் விநியோகம் செய்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000–க்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2.அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.டி2/8764/2022**

**502. அனுமதி வழங்கப்பட்டது.**

**22.)** மாமன்ற தீர்மானம் எண். 32 நாள். 13.05.2018-ல் அரசாணை எண் 249 நாள் 11.12.2008 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை மூலம் ஈரோடு மாநகராட்;சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், இதில் மொத்தம் 5 சிப்பங்களில் சிப்பம் எண் 2 நீங்கலாக 4 சிப்பங்களின் பணி முடிவுறும் நிலையில் உள்ளது எனவும், இத்திட்டத்தில் இதுவரை

செய்து முடிக்;கப்பட்ட 64,744 எண்ணிக்கை வீட்டு இணைப்புகளில் சிப்பம்-2 போக மீதி 40,000 எண்ணிக்கை இணைப்புகளுக்கு (மாநகராட்சி கட்டிடங்கள், பள்ளிகள், பொதுக்கழிப்பிடங்கள் உட்பட) வீட்டிணைப்புகள் வழங்க கீழ்க்;கண்டவாறு 6 சிப்பங்களாக பணிகள் பிரிக்கப்பட்டுள்ளது எனவும்

| வ.எண்; | சிப்பம் | வார்டு எண்கள் | மொத்த இணைப்புகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடி) |
|---|---|---|---|---|
| 1 | சிப்பம் 1 | 34,35,37,46,47,48 | 7000 | 6.40 |
| 2 | சிப்பம் 2 | 38,39,49,50,60 | 7000 | 6.40 |
| 3 | சிப்பம் 3 | 21,22,25,26,27,28 | 7000 | 6.40 |
| 4 | சிப்பம் 4 | 40,42,43,44,45 | 7000 | 6.40 |
| 5 | சிப்பம் 5 | 5,8,9,10,19,23 | 7000 | 6.40 |
| 6 | சிப்பம் 6 | 11,17,18,20,24,32 | 5000 | 4.40 |
| | | | | 36.40 |

மேற்கண்ட இப்;பணிகளுக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.36.40 கோடி ஆகிறது எனவும் இம்மாநகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் TUFIDCO மூலம் நிதியை வட்டியில்லா கடனாக பெற்று பணிகளை மேற்கொள்ள அனுமதித்தும், பணிகள் முடிந்த பிறகு வீட்டு உரிமையாளரிடமிருந்து தவணை முறையில் இத்தொகையினையும் மற்றும் முன்வைப்பு தொகையினையும் பயனீட்டாளர்கள் கட்டணத்துடன் சேர்ந்து வசூல் செய்து கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பவும் அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேறப்டி பணிகளை TUFIDCO-விடம் Interest free loan மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண். 12013/2018/UGSS-1-6 நாள். 17.05.2018-ன் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஈரோடு மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டியாக தேர்வானதைத் தொடர்ந்து இம்மாநகராட்சியில் இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு மானியம் 50% மற்றும் மாநில அரசு மானியம் 50% என மொத்தம் 100% மானியத்தில் மேற்கண்ட UGSS Internal Plumbing பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

எனவே ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் முழு மான்யத்துடன் மேற்கண்ட UGSS Internal Plumbing பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால், ஏற்கனவே மாமன்ற தீர்மானம் எண். 32 நாள். 13.05.2018-ன் வாயிலாக TUFIDCO, சென்னை மூலம் வட்டியில்லா கடன் பெற்று UGSS Internal Plumbing பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை எழாததால் தவணை முறையில் கடன் தொகையை பாதாள சாக்கடை பயனீட்டாளரிடமிருந்து வசூல் செய்ய வேண்டிய நிலை ஏற்படவில்லை. மேலும் முன்வைப்புத் தொகை, சாலை சீரமைப்பு கட்டணம், மேற்பார்வை கட்டணம் மற்றும் இணைப்பு கட்டணம் ஆகியவற்றை மட்டும் 10 சமதவணைகளில் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:.**

மாமன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். இ1/444/2018**

## 503. அனுமதி வழங்கப்பட்டது.

**23.)** நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்றத் தலைவர்கள், மன்றத் துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்குதல் தொடர்பான அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்:13.07.2023 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு-</u>

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.சி3/3918/2023**

**504. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்.**

**நாள். 31.07.2023** **ஈரோடு மாநகராட்சி.**

**ஈரோடு**

அனுப்புநர் பெறுநர்

திருமதி. சு. நாகரத்தினம்,

மாண்புமிகு மேயர்,

ஈரோடு மாநகராட்சி,

ஈரோடு – 638 001

**ந.க.எண். சி3/2023 நாள் 14.07.2023**

அய்யா/அம்மையீர்

பொருள்- ஈரோடு மாமன்றம் – 14.07.2023-ஆம் தேதி மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் – மாமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை- 14.07.2023-ஆம் தேதிய அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

////

ஈரோடு மாமன்றத்தின் 2023-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14.07.2023-ஆம் தேதி வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மாமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள் இத்துடன் தங்களுக்கு இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேயர்,
ஈரோடு மாமன்றம்,
ஈரோடு

இணைப்பு- கூட்ட நடவடிக்கைகள்

# நன்றித் தீர்மானம்

- தமிழகத்தில் முதல் முறையாக, நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகளான மாநகராட்சி மேயர் முதல் நகராட்சி, பேரூராட்சி கவுன்சிலர்கள் வரை அனைவருக்கும் இம்மாதம் முதல் மாதாந்திர மதிப்பூதியம் வழங்கிட உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றது.

## கூட்ட நடவடிக்கைகள்

**1.)** தமிழ்நாடு அரசாணை GO (Ms.) No.116, Municipal Administration and Water Supply Department, Dated: 24.08.2022-ல் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்துவதற்கு சேவை வழங்குனர்/நிறுவனர்/ ஒப்பந்ததாரர்களை ஈடுபடுத்துவதற்கு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் ஆணையாளர்களுக்கு அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநரக செயல்முறை உத்தரவு எண். 35883/2022/EA1-SWM-1, நாள்: 17.02.2023-ல், திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை வருடம் ஒன்றுக்கு ரூ.4360.87 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்துவதற்கு சேவை வழங்குனர்/நிறுவனம்/ ஒப்பந்ததாரர்களை

ஈடுபடுத்துவதற்கு ஈரோடு மாநகராட்சி ஆணையாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

| மாநகராட்சியின் பெயர் | உற்பத்தி செய்யப்படும் கழிவுகளின் அளவு (நாள் ஒன்றுக்கு) (TPD) | திடக்கழிவு களை கையாள்வ தற்கு விலை விகிதம் மெ.டன் ஒன்றிற்கு ரூ. | நாள் ஒன்றுக்கு மதிப்பிடப்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒரு வருடத்திற்கு மதிப்பிடப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ. இலட்சத்தில் | ஜி.எஸ்.டி 18% மற்றும் LWF 1% (ரூ.இலட்சத் தில்) | மொத்த மதிப்பீட்டு தொகை (ஒரு வருடத்திற்கு ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| ஈரோடு மாநகராட்சி | 257.00 | 3905.52 | 10.04 | 3664.6 | 696.27 | 4360.87 |

மேலும் சேவை வழங்கும் நிறுவனத்தின் திருப்திகரமான செயல்பாட்டின் அடிப்படையில் மாமன்ற ஒப்புதல் பெற்று இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கண்ட ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள ஒப்பந்தத்தை நீட்டிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நகராட்சி நிர்வாக இயக்குநரக அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்த சேவை வழங்குனர்/நிறுவனம்/ஒப்பந்ததாரர்களை ஈடுபடுத்துவதற்கும், ஓர் ஆண்டு உத்தேச செலவினம் ரூ.4360.87 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:-</u>**

1. மாதந்தோறும் தேவைப்படும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொது நிதியில் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில், 15-வது மாநில நிதிக்குழு பரிந்துரையில் திடக்கழிவு மேலாண்மை தலைப்பின் (SWM) கீழ் ஒதுக்கீடு செய்யப்படும், தொகையில் இருந்து ஈடு செய்யவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அழைப்பானது தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம்-1998 விதி எண்.2000-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்படுகிறது.
3. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் இவ்வலுவலகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவு செய்யும் ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
4. அரசாணை எண். 158 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்: 02.11.2022-ன் மூலம் ஒப்பந்தப்பணிக்குத் தேவையான தொழில்நுட்ப அனுமதி உரிய அதிகாரியிடம் இருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
5. விதிமுறைகளை பின்பற்றி தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் மனித சக்தி மற்றும் இயந்திரங்கள் விநியோகம் செய்ய பொறுப்பானவர் ஆவார்.
6. ஒப்பந்தப்புள்ளி அழைப்பு 3 வருட காலத்திற்கு வெளியிடப்பட்டாலும், ஒரு வருட காலத்திற்கு மட்டுமே ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்படும். அதன் பிறகு இரண்டு மற்றும் மூன்றாவது ஆண்டிற்கு பணியின் திருப்தியின் அடிப்படையில் மற்றும் மாமன்றத்தின் ஒப்புதலுடனும் மட்டுமே பணி ஆணை நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
7. ஒப்பந்ததாரரால் இப்பணிக்காக வழங்கப்படும் கேட்பு பட்டியல் தொகையானது நகதைட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 24608/2022/EA2, நாள்: 21.10.2022-ன் செயல்திறன் வழிகாட்டி (Key performance indicator) அடிப்படையில் சரிபார்த்த பின்னரே பட்டியல் தொகை வழங்கப்படும் என்ற விபரம் மாமன்றத்திற்கு தெரிவிக்கப்படுகிறது.
8. மேற்கண்ட செயல்முறை உத்திரவின்படி அனைத்து பணிகளையும், நாற்பது நாட்களுக்குள் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கிடவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

9. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் மாநகராட்சி வாகனங்களை பயன்படுத்திடும் பொழுது வழிகாட்டுதலில் (Key performance indicator) குறிப்பிட்டுள்ளவாறு வாடகை தொகையினை பட்டியலில் பிடித்தம் செய்து எஞ்சியுள்ள தொகையினை ஒப்பந்ததாரருக்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

10. இப்பணிக்கான நடைமுறையில் கூடுதல் விபரங்கள் தேவைப்படின் உரிய அதிகார அமைப்பிடம் அனுமதி பெற்றுக் கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

11. ஏற்கெனவே மாநகராட்சியில் உள்ள நிரந்தரப் பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு பட்டியலில் (இணைப்பு-2-ல்) கண்டுள்ளவாறு பணி ஒதுக்கீடு செய்யவும், ஒப்பந்ததாரரால் பணி அமர்த்தப்படும் பணியாளர்களுக்கு பட்டியல் (இணைப்பு-3-ல்) கண்டுள்ளவாறு பணி மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் ஒதுக்கீடு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

**இணைப்பு 1**

**வாகனங்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | மாநகராட்சியின் பெயர் | ஈரோடு மாநகராட்சி |
| 2. | மக்கள் தொகை | 6,45,242 |
| 3. | சேகரமாகும் மொத்தகழிவுகள் | 257 Ton |

<table>
<tr><td>4.</td><td>வாகனங்கள்<br>

| வ. எண் | வாகனத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் | 60 |
| 2. | இலகுரக வாகனம் | 155 |
| 3. | கனரகவாகனம் | 54 |
| 4. | காம்பேக்டர் | 6 |
| 5. | காம்பேக்டர் பின் | 200 |
| 6. | சாலை சுத்தம் செய்யும் இயந்திரம் | 1 |
| | **மொத்தம்** | **476** |

</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.24608/2022/இஎ2, நாள்.11.11.2022ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட நாளொன்றுக்கு வாடகை</td></tr>
</table>

| வாகனங்களின் விபரம் | தற்போது உள்ள வாகனங்கள் | புற ஆதார முறையில் வாடகைக்கு விடப்படும் எண்ணிக்கை | நாள்தோறும் வாடகை ரூ. | வசூல் செய்யப்பட வேண்டிய வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| பேட்டரி மூலம் செயல்படும் வாகனங்கள் (BOV) | 60 | 60 | 100 | 6000 |
| இலகுரக வாகனங்கள்(LCV) | 155 | 144 | 200 | 28800 |
| கனரக வாகனங்கள்(HCV) | 54 | 50 | 400 | 20000 |
| காம்பேக்டர் | 6 | 6 | 400 | 2400 |
| காம்பேக்டர் பின் | 200 | 200 | 15 | 3000 |
| சாலை சுத்தம் செய்யும் இயந்திரம் | 1 | 1 | 800 | 800 |
| **மொத்தம்** | **476** | **461** | | **61000** |

## இணைப்பு 2

## நிரந்தரப் பணியாளர்களை பணிக்கு அமர்த்தும் விபரம்

| **நடவடிக்கைகள்** | **நிரந்தர பணியாளர்கள்** | **வாகன விபரம்** | **இலகுரக வாகனம்** | **கனரக வாகனம்** |
|---|---|---|---|---|
| MCC, Windrow BMP ஈரக்கழிவு செயலாக்க மையங்கள் | 20 | | | |
| சுசுஊ உலர்கழிவு கையாளும் மையங்கள் | 12 | | | |
| பூங்கா துப்புரவு பணிகள் | 77 | | | |
| பேருந்து நிலையங்கள் | 19 | HCV | | 2 |
| மார்க்கெட் | 4 | LCV | 1 | |
| புதர்களை சுத்தம் செய்தல் | 10 | HCV | | 2 |
| மண் சாலைகளை தூய்மை படுத்துதல் | 5 | | | |
| வடிகால் (Silt) தூய்மை செய்தல் | 45 | | | |
| சமுதாய கழிப்பிடம் / பொது கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் | 132 | | | |
| மாநகராட்சி சுகாதார மையங்கள் சுத்தம் செய்தல் | 35 | | | |
| OHT Site, Pumping Site, STP தளங்கள் சுத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் | 23 | | | |
| புகை மருந்து அடித்தல் மற்றும் மலேரியா பணிகள் | 60 | LCV | 10 | |
| **மொத்தம்** | **442** | | **11** | **4** |

## இணைப்பு - 3

## சேவை வழங்குனர்/நிறுவனம்/ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் விவரங்கள்

| வ.எண். | மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் | எண்ணிக்கை/நீளம் |
|---|---|---|
| 1. | வீடு வீடாக பிரிக்கப்பட்ட குப்பைகளை BOV மூலம் சேகரித்து கழிவுகளை செயலாக்க மையம்/ கையாளும் வசதிகளுக்கு கொடுத்தல். | 23788 வீடுகள் |
| 2. | வீடுகளிலிருந்து LCV மூலம் பிரிக்கப்பட்ட குப்பைகளை வீடு வீடாக சேகரித்து, கழிவுகளை செயலாக்க மையம்/ கையாளும் வசதிகளுக்கு கொடுத்தல். | 146125 வீடுகள் |
| 3. | சிறிய அளவிலான வணிக மையங்களில் பிரித்தெடுக்கப்பட்ட கழிவுகளை வீடு வீடாக சேகரித்து இலகு இரக வணிக வாகனத்தை பயன்படுத்தி செயலாக்க மையம்/ கையாளும் வசதிகளுக்கு கொடுத்தல். | 18349 வணிக நிறுவனங்கள் |
| 4. | பெரிய அளவிலான வணிக வாகனங்களில் பிரித்தெடுக்கப்பட்ட கழிவுகளை வீடு வீடாக சேகரித்து செயலாக்க மையம்/ கையாளும் வசதிகளுக்கு கொடுத்தல். | 9037 வணிக நிறுவனங்கள் |
| 5. | 250-க்கும் மேற்பட்ட கடைகள் முதல் 500 கடைகள் வரை உள்ள மாநகராட்சி மாக்கெட் வளாகத்தில் தேங்கி கிடக்கும் கழிவுகளை துடைத்து சுத்தம் செய்து செயலாக்க மையம்/ கையாளும் வசதிகளுக்கு கொடுத்தல். | 10.00 டன் |
| 6. | பிரிக்கப்பட்ட கழிவுகளை இரண்டாம் நிலை சேகரிப்பு, இரண்டாம் நிலை சேமிப்பு புள்ளிகள் மற்றும் சமூக தொட்டிகள் பரிமாற்ற நிலையங்கள் போன்றவற்றில் கனரக வாகனத்தை பயன்படுத்தி செயலாக்க மையம்/ கையாளும் வசதிகளுக்கு கொடுத்தல். | 155 டன் |
| 7. | தினமும் சாலைகளை துடைத்து கழிவுகளை செயலாக்க மையம்/ கையாளும் வசதிகளுக்கு கொடுத்தல். | 52.00 கி.மீ |
| 8. | தினசரி அடிப்படையில் தெருக்களை துடைத்து கழிவுகளை செயலாக்க மையம்/ கையாளும் வசதிகளுக்கு கொடுத்தல். | 26.70 கி.மீ |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. அனுமதி வழங்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/7219/2022**

**479. <u>அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**2.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பெரும்பள்ளம் ஓடையை மேம்பாடு செய்து அழகுபடுத்தும் பணி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரும்பள்ளம் ஓடையின் கரையோரங்களில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களை அகற்ற வேண்டியிருந்ததால் மேற்படி ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மறுவாழ்விடம் வழங்கும் பொருட்டு சித்தோடு பேரூராட்சிக்குட்பட்ட நல்லாகவுண்டன்பாளையத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள 3264 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடுகள் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி இல்லாததால் மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர்களின் நேராய்வின் போது உடனடியாக மேற்படி குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து குடியிருப்புகளை பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யவும், தற்போது ஈரோடு மாநகராட்சிக்கு ஊராட்சிக் கோட்டை குடிநீர் திட்டம் செயல்பாட்டிற்கு

வந்துள்ளதால் இக்குடியிருப்புகளுக்கு அருகிலும் தற்போது பயன்படுத்தாத நிலையிலும் உள்ள சூரியம்பாளையம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைத்து, அங்கிருந்து குழாய் அமைத்து இக்குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்யவும் அதற்கான செலவினத் தொகையை தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஈரோடு மாநகராட்சிக்கு செலுத்திவிட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

அதற்கிணங்க இப்பணிக்கு ரூ. 14.75 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. மேற்கண்ட பணியை Deposit work ஆக ஈரோடு மாநராட்சி மூலம் மேற்கொள்ளவும், அதற்குரிய அரசு அனுமதி பெற அரசுக்கு கருத்துரு அனுப்பவும் இம்மாமன்றத் தீர்மானம் எண்.377 நாள். 31032023-ன் வாயிலாக மாமன்ற அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் நக.எண்.இ14367/2022 நாள்.20.04.2023-ன் வாயிலாக கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு சமர்ப்பிக்கப்பட்ட கருத்துருவை பரிசீலனை செய்து மேற்படி குடியிருப்புகளுக்கு இம்மாநகராட்சியால் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டத்தினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்யும் விபரங்களை தெரிவிக்க கோரப்பட்டது. அதன் விபரங்களை தெரிவிக்க கேட்டு நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருப்பூர் அவர்களிடம் கோரப்பட்டதில் மேற்கண்ட குடியிருப்புகளுக்கு மாநகராட்சி மூலம்

செயல்படுத்தப்படும் குடிநீர் பராமரிப்பை இவ்வாரியத்தின் மூலம் மேற்கொள்ள இயலாது என்றும் மேற்படி குடியிருப்புகள் அமைந்துள்ள சித்தோடு பேரூராட்சிக்கு இக்குடிநீர் திட்டத்தின் பராமரிப்பு பணிகள் ஒப்படைக்கப்படும் எனவும் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், திருப்பூர் அவர்களின் கடிதம் நக.எண்.009/EE/TPRDN/2021 நாள்.24.05.2023-ன் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டப் பணிகளின் பராமரிப்பினை சித்தோடு பேரூராட்சி ஏற்றுக் கொள்வதற்கான இசைவினையும் மற்றும் பேரூராட்சி மன்ற தீர்மானத்தையும் வழங்க நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலகத்தில் கோரப்பட்டது. அதற்கிணங்க சித்தோடு பேரூராட்சிக்குட்பட்ட நல்லாகவுண்டன்பாளையத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள 3264 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ஈரோடு மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோகத் திட்டம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் தொடர் பராமரிப்பு பணிகளையும் மேற்படி திட்டப் பகுதியில் சாலை வசதி மற்றும் தெருவிளக்கு வசதி ஆகிய பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டவுடன் சித்தோடு பேரூராட்சியின் தொடர் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படும் என சித்தோடு பேரூராட்சியின் மன்றத் தீர்மான எண். 71/2023 & 72/2023 நாள். 12.06.2023-ன் வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டு செயல் அலுவலர், சித்தோடு பேரூராட்சி அவர்களின் நகஎண்.102/2023 நாள்15.06.2023-ன் வாயிலாக கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட விபரம் இவ்வலுவகை கடிதம் நகான்.இ1-4367/2022 நாள்:19062022-ன் வாயிலாக நகராட்சி

நிர்வாக இயக்குனருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் சித்தோடு பேரூராட்சியின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு மேற்கண்ட குடிநீர் திட்டப்பணிக்கு ஈரோடு மாநகராட்சியின் சூரியம்பாளையம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உட்கட்டமைப்புகளை இலவசமாக பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கக்கோரி செயல் அலுவலர். சித்தோடு பேரூராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்:102/2023, நாள். 28.06.2023-ல் கோரப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சியில் 9 குடிநீர் நீரேற்று நிலையத்துடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு. நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்போது ஊராட்சி கோட்டை தனிக்குடிநீர் திட்டம் செயலாக்கத்திற்கு வந்துள்ளதால் மேற்கண்ட 9 தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் அதன் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

இந்நிலையில் ஈரோடு மாநகராட்சி பெரும்பள்ளம் ஓடையிலிருக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாற்று இடமாக நல்லாகவுண்டம்பாளையத்தில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படுவதாலும், வருங்காலத்தில் சித்தோடு பேரூராட்சி ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்பட சாத்தியக்கூறுகள் உள்ளது என்பதாலும் இம்மாநகராட்சிக்கு சொந்தமானதும் தற்போது பயன்படுத்தப்படாத நிலையிலும் உள்ள சூரியம்பாளையம், குடிநீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உட்கட்டமைப்புகளை பேரூராட்சிக்கு பெயர் மாற்றம் செய்யாமல் அரசின் அனுமதி பெற்று சித்தோடு

பேரூராட்சிக்குட்பட்ட நல்லாகவுண்டம்பாளையம் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு மட்டும் யன்படுத்திக் கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு.</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.இ1/4367/2022**

**480. தற்போது பயன்பாடற்ற நிலையிலுள்ள சூரியம்பாளையம் குடிநீரேற்று நிலையத்தின் உட்கட்டமைப்புகள் நாளடைவில் சிதிலமடைந்து விடுவதை தடுக்கும் விதமாகவும், நல்லாகவுண்டம்பாளையம் குடியிருப்பு பொதுமக்களுக்கு பயன்படும் விதமாக இக்குடிநீர் திட்டத்திற்கு இலவசமாக பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கலாம்.**

**இப்பொருள் மீது அ.இ.அ.தி.மு.க (6) மாமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்தார்கள்.**

**3.)** தமிழ்நாடு அரசாணை (பல) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 24.08.2022-ல் மாநகராட்சிகள்/ நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்துவதற்கு சேவை வழங்குநர் / முகவர் / ஒப்பந்ததாரர் / நிறுவனர் தேர்வு செய்ய ரூ.4360.87 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.35883/2022/EA1/SWM-1, நாள்:17.01.2023 அன்று ஈரோடு மாநகராட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சேவை வழங்கும் நிறுவனத்தின் செயல்திறனை அடிப்படையாக கொண்டு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தத்தை நீட்டிக்க மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தபுள்ளிக்கான ஒப்பந்த ஆவணம் தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குனரகம், சென்னை அவர்களின் ந.க.எண்.001/2022/DO1, நாள்:07.03.2023-ன் கடிதம் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களால் 22.05.2023 தேதியன்று நிர்வாக முன்அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு E-Tendering முறையில் இரு உறை அமைப்பில் 27.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது,

1) திருவாளர். RSK Tech Traders Pvt. Ltd, Tirchy,
2) திருவாளர். Amboy Associates, Salem.

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகையை வங்கி வரைவோலையாக வழங்கியுள்ளார்கள். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை 30.06.2023 அன்று தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், தொழில்நுட்ப தகுதிக்களுக்கான நிபந்தனைகளில் தெரிவித்துள்ளபடி தகுதி வாய்ந்ததாக உள்ளது. எனவே மேற்படி தகுதிவாய்ந்த ஒப்பந்தபுள்ளிகளின் விலைப்படிவங்கள் (Price bid) 03.07.2023 அன்று காலை திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலையை அனுமதிக்கப்பட்ட ஒரு மெட்ரிக் டன் (GST 18% மற்றும் LWF 1% தவிர்த்து) அளவிலான திடக்கழிவுகளை கையாள்வதற்கான விலையை ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு,

| **வ.எண்** | **திடக்கழிவுகளை கையாள்வதற்கான அனுமதிக்கப்பட்ட விலை ரூ.** | **திருவாளர். Amboy Associates, Salem** | **திருவாளர். RSK Tech Traders Pvt. Ltd, Tirchy** |
|---|---|---|---|
| 1. | 3905.52/டன் | 3903.00/டன் | 3905.00/டன் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட ஒரு மெட்ரிக் டன் விலையை விட **(-) 0.06** சதவீதம் குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திருவாளர். Amboy Associates, Salem** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை, குறைத்துக் கொடுக்குமாறு இவ்வலுவலக கடிதம் எண்.எச்1-7219-2022-ன் மூலம் 03.07.2023 தேதியன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் தனது 04.07.2023 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் குறைந்தபட்ச ஊதியம், வாகன எரிபொருள் மற்றும் வாகன காப்பீடு

உயர்ந்துள்ளதால் மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே திடக்கழிவு மேலாண்மை பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஒரு மெட்ரிக் டன் விலையை விட **(-) 0.06** சதவீதம் குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திருவாளர். Amboy Associates, Salem** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணி திடக்கழிவு மேலண்மை பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரும், அனுமதிக்கப்பட்ட ஒரு மெட்ரிக் டன் விலையை விட **(-) 0.06**% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திருவாளர். Amboy Associates, Salem** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/7219/2022**

**481. அனுமதி வழங்கப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்.**

**நாள். 14.07.2023** **ஈரோடு மாநகராட்சி.**

**ஈரோடு**

## நன்றித் தீர்மானம்

- தமிழகத்தில் முதல் முறையாக, நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகளான மாநகராட்சி மேயர் முதல் நகராட்சி, பேரூராட்சி கவுன்சிலர்கள் வரை அனைவருக்கும் இம்மாதம் முதல் மாதாந்திர மதிப்பூதியம் வழங்கிட உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றது.

## நன்றித் தீர்மானம்

- தமிழகத்தில் முதல் முறையாக, நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகளான மாநகராட்சி மேயர் முதல் நகராட்சி, பேரூராட்சி கவுன்சிலர்கள் வரை அனைவருக்கும் இம்மாதம் முதல் மாதாந்திர மதிப்பூதியம் வழங்கிட உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றது.

## நன்றித் தீர்மானம்

- தமிழகத்தில் முதல் முறையாக, நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகளான மாநகராட்சி மேயர் முதல் நகராட்சி, பேரூராட்சி கவுன்சிலர்கள் வரை அனைவருக்கும் இம்மாதம் முதல் மாதாந்திர மதிப்பூதியம் வழங்கிட உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றது.